DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.1 MADURANTAKAM

Calender : CC 129/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரிகள் ஆஜர்**

| | |
|---|---|
| Name | பாக்கியநாதன் |
| Father / Husband Name | சக்கரபாணி |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 29.06.2026

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

1. இந்த வழக்கின் இரண்டாம் எதிரி சிவநேசன் என்பவர் எனக்கு எதிராகவும் என் மனைவி செல்வி என்பவருக்கு எதிராகவும், ஒரத்தி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் முதல் தகவல் அறிக்கை அவர் கொடுத்த புகாரின் மீது எனக்கு எதிராகவும், என் மனைவிக்கு எதிராகவும் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை என்றால் சரிதான். **(அந்த முதல் தகவல் அறிக்கை எ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அந்த முதல் தகவல் அறிக்கையின் பேரில் இதே நீதிமன்றத்தில் எனக்கு எதிராகவும், என் மனைவிக்கு எதிராகவும் சிசி.497/2024 நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். 1ம் எதிரி எனக்கு எதிராகவும், என் மனைவிக்கு எதிராகவும் 31.08.2024 அன்று ஒரத்தி காவல் நிலையத்தில் ஒரு புகார் கொடுத்தார் என்றாலும், என்னிடம் காட்டப்படும் புகார் ஏற்பு ரசீது அவர் கொடுத்த புகாருக்கு வழங்கப்பட்டது என்றாலும், அதில் என்னுடைய பெயர் உள்ளது. ஆனால் புகார் கொடுக்கப்பட்ட விவரம் எனக்கு தெரியாது.

2. 05.08.2024 அன்று மாலை எதிரிகள் எத்தனை மணிக்கு வந்தார்கள் என்றால் மாலை 6.00 மணிக்கு மேல் இருக்கும். இந்த விவரத்தை என்னுடைய முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். இந்த விவரத்தை நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். எதிரிகள் வந்ததாக கூறும் இருசக்கர வாகனம் என்ன வாகனம் என்றால் பைக். மூன்று பேரும் ஒரே பைக்கில் தான் வந்தார்கள். பெட்ரோல் பாட்டிலை யார் ஊற்றினார் என்றால் ஞானவேல் ஊற்றினார். அந்த பாட்டில் என்ன வகையான பாட்டில் என்றால் தண்ணீர் குடிக்கும் வாட்டர் பாட்டில். இந்த விவரத்தை என்னுடைய புகாரிலோ, இந்த வழக்கின் பிராதிலோ, அல்லது முதல் விசாரணையிலோ சொல்லியுள்ளேனா என்றால் இந்த வழக்கில் சொல்லியுள்ளேன். தீப்பெட்டி எடுத்து கொளுத்திவிடுவேன் என்று யார் சொன்னது என்றால் சிவநேசன்.

3. மேற்படி பிரச்சனை குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் 06.08.2024. எத்தனை மணிக்கு கொடுத்தேன் என்றால் பகல் 2.00 மணிக்கு

மேல் கொடுத்தேன். மேற்படி புகாரை ஒரத்தி காவல் நிலையத்தில் கொடுத்தேன். மேற்படி புகாரை பெற்ற அதிகாரியின் பெயர் மற்றும் பதிவு எண் எனக்கு தெரியாது. நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், நான் எதிரிகளை பழிவாங்க வேண்டும் என்பதற்காக பொய்யாக வழக்கை தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. யார் 108 ஆம்புலன்ஸ்க்கு தகவல் சொன்னது என்றால் வெளியூரில் இருந்து சவுக்கு வெட்டும் வேலைக்கு வந்த நபர்கள் தகவல் சொன்னார்கள். சம்பவம் நடந்தபோது என்னுடன் வேறு யார் இருந்தார்கள் என்றால் என்னுடன் யாரும் இல்லை, அனைவரும் கூட்டமாக இருந்தார்கள்.

4. அப்போது நான் மயக்கத்தில் இருந்ததால் அங்கு யார் யார் இருந்தார்கள் என்று தெரியவில்லை. 108 ஆம்புலன்ஸில் என்னை எந்த மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் திண்டிவனம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். எந்த தேதியில் என்னை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள் என்றால் 06.08.2024 அன்று காலை 9.00 மணியளவில் அழைத்துச் சென்றார்கள். திண்டிவனம் அரசு மருத்துவமனையில் நான் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரிதான். எத்தனை நாள் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் ஒரு நாள். நான் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டதற்கான ஆவணத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் அவ்வாறு எந்த சிகிச்சையும் எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

5. திண்டிவனம் மருத்துவமனை ஊழியர்களை விசாரணை செய்தால் நான் சொன்ன தேதியில் சிகிச்சை எடுத்துக்கொண்டேனா என்றால் விவரம் தெரியவரும் என்றால் சரிதான். எனக்கும் எதிரிகளுக்கும் இடையே ஏற்கெனவே சொத்து சம்மந்தமாக தகராறு உள்ளது என்றால் சரியல்ல. என்னுடைய முதல் விசாரணையில் 05.08.2024 அன்று நிலத்தை அளந்தது தொடர்பாக பிரச்சனை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எனக்கும் எதிரிகளுக்கும் இடையேயான சொத்து பிரச்சனைக்கு பழிவாங்கவேண்டும் என்பதற்காக எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், ஆஜர் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. ஒரத்தி காவல் துறையினரை விசாரணை செய்தால் 07.08.2024 அன்று நான் புகார் கொடுத்தேனா இல்லையா என்பது தெரியவரும் என்றால் சரிதான்.

6. எதிரி சிவநேசன் அளித்த வழக்கில் நானும் என் மனைவியும் நீதிமன்றத்தில் ஆஜராகி வருகிறோம் என்றாலும், அதற்கு பழிவாங்கும் நோக்கத்தில் எதிரிகளுக்கு எதிராக பொய்யாக புகார் கொடுத்து அதை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.